மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 111 ஏக்கர் தனியார் நிலங்கள், அரசுக்குச் சொந்தமான 732 ஏக்கர் நிலங்களை செய்களத்தூர், சிறுபள்ளம், கே.ஆர். பள்ளம் கிராமங்களில் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ரெவின்யூ அதிகாரி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்சாக வைகை ஆற்றுப் படுகையில் இருந்து குடி தண்ணீர் எடுக்கும் நடவடிக்கையும் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் வட்டாரத்தில் குளோரைடு பாக்டரி கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டு பங்குதாரர்கள் எல்லாம் சேர்த்த பிறகு அதை அரசாங்கம் தனியார் துறைக்குக் கொடுத்திருப்ப தாகத் தகவல் வந்திருக்கிறது. அதை மறுபடியும் கூட்டுறவுத் துறையில்—மானாமதுரையில் ஆற்றுப்படுகை இருக்கும் காரணத் தால் தண்ணீர் வசதி இருக்குமென்ற அடிப்படையில் மானாமதுரை யில் மீண்டும் இந்தத் தொழில்களோடு இதையும் சேர்த்துத் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொட்டாஷியம் குளோ ரைடு என்ற தொழிற்சாலை தனி நபர்களும் அரசாங்கமும் சேர்ந்து கூட்டுத்துறையில் மேலூர் வட்டத்தில் தொடங்கப்பட்டி ருக்கிறது. அலுமினியம் ப்ளோரைடு தொழிற்சாலை மதுரைக்குப் பக்கத்தில் கூட்டுத் துறையில் தொடங்கப்பட்டிருக்கிறது.

உரோமப் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்

*687 வினா— திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விண்ணமங்கலம், "டேன்ஸி" உரோமப் பத னிடும் தொழிற்சாலைக்கு இயந்திரங்கள் தேவை என்ற கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை

(இ) எழவில்லை.

திரு. கே. எ. வகாப் : விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. இன்னும் அது நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால் ஆலோசனை சொல்ல நல்ல ஆட்களாக, தோல் தொழிலின் நுணுக்கங்களைத் தெரிந்த வர்களாகக் கொண்ட ஒரு குழுவை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆலோசனைக் குழு தேவை என்று நான் கருதவில்லை. தோல் தொழில் நடத்துபவர்களுக்கு இப்போது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது போக்கப்பட வேண்டும். இப்போது விண்ணமங்கலம் தொழிற் துறைக்கு இயந்திர சாதனங்கள் தேவை. அந்த இயந்திரம்—பெய்லிங் பிரஸ் வேண்டுமென்று கேட்டு டெண்டர் கோரப் பட்டபோது யாரும் அதை சப்ளை செய்ய முன்வரவில்லை. இது சாத்தியமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : விண்ணமங்கலத்தில் அரசுத் துறையில் இந்தத் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. இதே மாதிரி மதுரை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் இத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆலோசிசிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விண்ணமங்கலம் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் கருத்து பரிசீலிக்கப்படும்.

Road Grants to Panchayat Unions

*688 Q.—THIRU N. DENNIS : Will the Honourable the Minister for Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to revise the base year of 1967 for determining the length of the Panchayat Union roads for the allotment of Local Roads Grant?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1—4—1973-ல் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் ஒன்றிய சாலைகளின் நீளத்தையும், 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணிப்பின் அடிப்படையிலும் 1974-75-க்கு தலசாலை மானியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : கேள்வி கேட்கப்பட்ட போது, பல்லாண்டுகளாக, 1967-க்கு முன் பஞ்சாயத்து யூனியன் சாலைகள் இருந்த நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப் பராமரிக்க கஷ்டங்கள் இருந்தன. இப்போது பல ஊராட்சிச் சாலைகளைப் பஞ்சாயத்து யூனியன் சாலைகளாக தரம் பிரித்திருக்கிறார்கள். ஊராட்சி நிதி பற்றுக்குறை இருக்கும் காரணத்தால் ஆண்டுக்கு ஆண்டு பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் உடனுக்குடன் கொடுக்க அரசு முன்வருமா ?